செய்தி வெளியிடு எண்:699

**<u>செய்தி வெளியீடு – 17.8.2010</u>**

## ஏழை எளியோர் வாங்குவதற்கு வசதியாக 25 ரூபாய் மானிய விலையில் 10 மளிகைப் பொருள் பொட்டலம்! இரண்டு பொட்டலங்கள் வாங்கிக் கொள்ளலாம்! மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு!

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு ஏழை எளிய மக்களை விலைவாசி உயர்வின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும்பொருட்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் அன்றாட சமையலுக்குத் தேவைப்படும் 10 வகையான சமையல் பொருள்கள் அடங்கிய மளிகைப் பொட்டலம் ஒன்று 50 ரூபாய் என்ற மானிய விலையில் நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யும் திட்டம் 2008 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மல்லித்தூள், மிளகாய்த்தூள், உடைத்த உளுத்தம்பருப்பு ஆகியன ஒரு சராசரி குடும்பத்தின் தேவையைவிட அதிகமாக இருப்பதாகவும், மல்லித்தூள், மிளகாய்த் தூள் ஆகியவற்றை இருப்பு வைத்துப் பயன்படுத்துவதில் சிரமம் இருப்பதாகவும், ஒரே நேரத்தில் 50 ரூபாய் செலவழித்து இப்பொருள்களை வாங்குவதில் பலரும் சிரமப்படுவதாகவும் அரசின் கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து; ஏழை எளிய மக்கள் இப்பொருள்களை எளிதாக வாங்கிப் பயன்படுத்துவதற்கு ஏற்ப மல்லித்தூள், மிளகாய்த்தூள், ஆகியவற்றின் எடை அளவுகளைக் குறைத்து, 25 ரூபாய் என்ற விலையில் குடும்ப அட்டைதாரர்கள் தேவை மற்றும் வசதிக்கேற்ப மாதம் இரண்டு பொட்டலங்கள் வரை வாங்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவ்வாறே நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன.

இதன்படி, 25 ரூபாய்க்கு வழங்கப்படும் ஒரு பொட்டலத்தில் 50 கிராம் மஞ்சள் தூள், 50 கிராம் மல்லித்தூள், 100 கிராம் மிளகாய்த் தூள், 50 கிராம் கடலைப்பருப்பு, 25 கிராம் வெந்தயம், 25 கிராம் கடுகு, 25 கிராம் உடைத்த உளுத்தம்பருப்பு, 25 கிராம் மிளகு, 50 கிராம் சீரகம், 10 கிராம் கரம் மாசாலா ஆகியவை அடங்கியுள்ளன.

இவற்றை இரண்டு பொட்டலங்களாக 50 ரூபாய்க்கு வாங்குவதன் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட 250 கிராம் மல்லித்தூள் 100 கிராம் எனவும், 250 கிராம் மிளகாய்த் தூள் 200 கிராம் எனவும், பொதுமக்களின் வசதிக்கேற்ப குறைத்து வழங்கப்பட்டாலும்; மஞ்சள் தூள் 50 கிராம் என்பது 100 கிராம் எனவும், கடலைப் பருப்பு 75 கிராம் என்பது 100 கிராம் எனவும், வெந்தயம் 25 கிராம் என்பது 50 கிராம் எனவும், கடுகு 25 கிராம் என்பது 50 கிராம் எனவும், மிளகு 25 கிராம் என்பது 50 கிராம் எனவும், சீரகம் 50 கிராம் என்பது 100 கிராம் எனவும், கரம் மசாலா 10 கிராம் என்பது 20 கிராம் எனவும் கூடுதலாக வழங்கப்படுகின்றன.

இது ஏழை எளியோர்க்கு வாங்குவதற்கு வசதியாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மளிகைப் பொருள்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்து நியாய விலைக் கடைகளில் வழங்கும்முறையில் எந்தவித மாற்றமும் இல்லை.

*****